# 4.1 திருவிவிலியம் எழுத்துருவம் பெறல்



திருவிவிலியம் என்பது கிறிஸ்தவ அடியார்களின் இறைப்பற்றை அடிப்படையாகக் கொண்ட தூய நூலாகும். முழு உலகையும் படைத்த கடவுளுடன் கொள்ளும் தொடர்பின் மூலம் கிட்டும் மெய் வாழ்வை அல்லது மீட்பை அளிக்கும் உண்மைகளை திருவிவிலியம் கொண்டுள்ளது. இவ் மீட்பை முழுமையாய் பெறுவதற்கு மனிதர் எவ்விதமான தொடர்பை கடவுளுடன் கொள்ளுதல் வேண்டும் என்பதை திருவிவிலியம் விளக்குகிறது.

இப்பாடத்தின் மூலம் திருவிவிலியம் எவ்விதம் பல்வேறு மொழிகளில் எழுதப்பட்டது என்பதை அறிந்து கொள்ளலாம்.

இஸ்ரயேலரின் வரலாற்றை பின்னோக்கிப் பார்ப்பின், இறை செய்தி வாய்மொழிப் பராம்பரியத்தில் காக்கப்பட்டு, பிற்காலத்தில் எழுத்து நிலையை அடைந்தது. திருவிவிலியம் ஆங்கிலத்தில் **பைபிள்** என அழைக்கப்படுகிறது. இச்சொல் **புத்தகம்** என்னும் பொருள் கொண்ட கிரேக்கச் சொல்லான **பிப்ளோஸ்** என்னும் மூலச் சொல்லில் இருந்து பெறப்பட்டதாகும். திருவிவிலிய நூல்கள் தொடக்கத்தில் **பப்பிரஸ்** என்னும் நாணல் தண்டுகளினால் அமைக்கப்பட்ட தாளில் எழுதப்பட்டது. அதன் பின்பு ஆட்டுத்தோலில் எழுதப்பட்டது. இதையே **சுருள்** என அழைத்தனர். சீனாய் மலையில் பத்துக் கட்டளைகள் வழங்கப்பட்ட போது அவை பலகையில் எழுதப்பட்டு இருந்ததாக திருவிவிலியத்தில் காண்கிறோம்.

மெசபொத்தேமிய பண்பாட்டில் இருந்து வந்த களிமண் தட்டுகளில் எழுதும் வழக்கமே மிகப் பழைமையானது. திருவிவிலியத்திலுள்ள நூல்களை எழுதுவதற்கு நீண்ட காலம் சென்றதாக நம்பப்படுகிறது. அவை கி.மு பதின்மூன்றாம் நூற்றாண்டு முதல் கி.பி முதலாம் நூற்றாண்டு வரையிலான காலப்பகுதியில் எழுதப்பட்டதாக நம்பப்படுகின்றது. திருவிவிலியத்தின் நூல்கள் கால வரிசையில் அடுக்கப்படவில்லை என்பதை கருத்தில் கொள்வது நல்லது.



இலவச விநியோகத்திற்காக

பல்வேறு காலகட்டங்களில் வெவ்வேறு ஆசிரியர்களினால் இந்நூல்கள் எழுதப்பட்டன.திருவிவிலிய நூல்கள் பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு என்னும் இரு பெரும் பிரிவுகளைக் கொண்டுள்ளது. இது கிறிஸ்துவுக்கு முன் இருந்த இஸ்ரயேலின் இரண்டாயிரம் ஆண்டு கால வரலாற்றை உள்ளடக்கியதாகக் காணப்படுகின்றது.

| | | |
|---|---|---|
| ✠கி. மு 8ம் நூற்றாண்டு | : | எசாயா ஒசேயா, ஆமோஸ், , மற்றும் மீக்கா ஆகியோரின் இறைவாக்கு நூல்கள்ற. |
| ✠கி. மு7ம் நூற்றாண்டு | : | இணைச்சட்டம், செப்பனியா, எரேமியா, நாகூம் |
| ✠கி. மு6ம் நூற்றாண்டு | : | அபக்கூக்கு, நீதித்தலைவர்கள், 1 - 2 சாமுவேல் மற்றும் 1 - 2 அரசர்கள் |
| ✠கி. மு5ம் நூற்றாண்டு | : | மலாக்கி, யோபு |
| ✠கி. மு4ம் நூற்றாண்டு | : | பஞ்சாகமம், யோசுவா |
| ✠கி. மு3ம் நூற்றாண்டு | : | குறிப்பேடுகள், சபை உரையாளர் |
| ✠கி. மு2ம் நூற்றாண்டு | : | தானியேல் |
| ✠கி. மு1ம் நூற்றாண்டு | : | வரலாறு தொடர்பான ஏனைய நூல்கள் |

- ✠ கி.பி 100ம் ஆண்டளவில் ஏறத்தாழ அனைத்து புதிய ஏற்பாட்டு நூல்களும் எழுத்துரு பெற்றன. கி.பி 50இல் பவுலுடைய முதலாம் மடல் (1 தெசலோனிக்கேயர்) துவங்கி ஏனைய அனைத்து பவுலின் மடல்களும் எழுதி நிறைவு செய்யப்பட்டது.

- ✠ கி.பி 70-90 அளவில் முதல் மூன்று நற்செய்தி நூல்கள் மற்றும் திருத்தூதர் பணிகள் அத்துடன் நூற்றாண்டின் இறுதியில் யோவான் நற்செய்தி நூல் எழுதப்பட்டதாக புதிய ஏற்பாட்டு அறிஞர்கள் பரவலாக ஏற்றுக் கொண்டுள்ளனர். கி.பி 70ம் ஆண்டிற்கு பின்பு மறைபொருள் இலக்கிய வகையைச் சேர்ந்த திருவெளிப்பாடு நூல் எழுதப்பட்டது.


- ✠ 2ம் நூற்றாண்டின் முதற்காலாண்டில் ஆயர் மடல்கள் (1-2 தீமோத்தேயு மற்றும் தீத்து) எழுதப்பட்டதென புதிய ஏற்பாட்டின் அறிஞர்கள் ஏற்கின்றனர்.

சில நூல்கள் மூலம் அதன் ஆசிரியர் யார் என்பது தெளிவாக அறிந்து கொள்ளலாம். இன்னுஞ் சில நூல்கள் ஒன்றுக்கு மேற்பட்ட ஆசிரியர்களால் எழுதப்பட்டதாக நம்பப்படுகின்றது. திருவிவிலியம் இறைவழிநடத்துதலைப் பெற்றுக் கொண்ட பல ஆசிரியர் மூலம் ஏறத்தாழ ஆயிரத்து நானூறு ஆண்டுகால இடைவெளியினுள் எழுதப்பட்டது.

**கல்வெட்டுக்கள் -**

பத்துக்கட்டளைகள் பொறிக்கப்பட்ட கல்வெட்டு





**தோற்சுருள்**


ஆட்டுத்தோலினால் அமைந்த தோற்சுருளில் நீதிச் சட்டம். அவை தொழுகைக் கூடங்களில் பயன்படுத்தப்பட்டன.







**நாணற்புல்லில் அமைந்த ஏடுகள் (பப்பிரஸ்)**

எகிப்தில் ஆற்றங்கரையில் உயர்ந்து வளர்ந்த ஒருவகை நாணல் புல்லில் அமைந்த எழுத்தேடுகள்.




யோவான் எழுதிய நற்செய்தியின் முதல் பக்கத்தின் ஒரு பகுதி


கி.பி. முதலாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் கும்ரான் குகை II இல் கண்டெடுக்கப்பட்ட திருப்பாடல்கள் சுருள்




கி.மு 100 ஆண்டளவில் கும்ரான் குகை II இல் கண்டெடுக்கப்பட்ட லேவியர் சுருள்

எபிரேய மொழி வேத பிரதி (பப்பிரஸ் ஏட்டில் எழுதப்பட்டுள்ளது)




கிரேக்க மொழி வேத பிரதி (பப்பிரஸ் ஏட்டில் எழுதப்பட்டுள்ளது)



இலவச விநியோகத்திற்காக

பழைய ஏற்பாடு அநேகமாக வரலாற்று நிகழ்வுகளையும், இறைவாக்குகளையும் தன்னகத்தே கொண்டுள்ளது. இவற்றை இஸ்ரயேலர் முப்பெரும் பிரிவுகளாகப் பிரித்துப் பயன்படுத்தினர். அவையாவன

1. சட்டங்கள் (தோரா)
2. இறைவாக்கு (நபீயீம்)
3. பாடல்கள் (கெத்துபீம்)

இவைகளில் இஸ்ரயேலரின் சமூக அமைப்பு, வரலாறு, அரசியல், பண்பாடு மற்றும் சமய ஈடுபாடு குறித்த செய்திகள் அடங்கியுள்ளன. முப்பத்தொன்பது (39) நூல்களைக் கொண்ட பழைய ஏற்பாடு எபிரேய மொழியில் எழுதப்பட்டதோடு அவற்றில் சில நூல்கள் அரமேய மொழியில் எழுதப்பட்டதாக நம்பப்படுகிறது. அதேபோன்று புதிய ஏற்பாட்டில் உள்ள இருபத்தேழு நூல்கள் கிரேக்க மொழியில் எழுதப்பட்டுள்ளன.

ஆண்டவர் இயேசு போதித்த, மற்றும் பேசிய மொழி அரமேய மொழி ஆகும். இயேசுவின் சீடர்களும் அம்மொழியையே உபயோகித்தனர். இருப்பினும் ஆட்சி மொழியான கிரேக்க மொழியிலேயே புதிய ஏற்பாடு எழுதப்பட்டது.

# திருவிவிலியம்

## பழைய ஏற்பாடு

### திருச்சட்டங்கள்
1. தொடக்கநூல்
2. விடுதலைப் பயணம்
3. லேவியர்
4. எண்ணிக்கை
5. இணைச்சட்டம்

### முற்கால இறைவாக்கு
1. யோசுவா
2. நீதித் தலைவர்கள்
3. 1 சாமுவேல்
4. 11 சாமுவேல்
5. 1 அரசர்கள்
6. 11 அரசர்கள்

### பிற்கால இறைவாக்கு

#### பெரியது
1. எசாயா
2. எரேமியா
3. எசேக்கியல்

#### சிறியது
1. ஒசேயா
2. யோவேல்
3. ஆமோஸ்
4. ஒபதியா
5. யோனா
6. மீக்கா
7. நாகூம்
8. அபக்கூக்கு
9. செப்பனியா
10. ஆகாய்
11. செக்கரியா
12. மலாக்கி

### எழுத்தேடுகள் இலக்கியம்
1. ரூத்
2. எஸ்தர்
3. யோபு
4. திருப்பாடல்கள்
5. நீதிமொழிகள்
6. சபை உரையாளர்
7. இனிமைமிகு பாடல்கள்
8. புலம்பல்

### வரலாறு
1. 1 குறிப்பேடு (நாளாகமம்)
2. 2 குறிப்பேடு
3. எஸ்ரா
4. நெகேமியா

### மறைபொருள் இலக்கியம்
1. தானியேல்

## புதிய ஏற்பாடு

### நற்செய்திகள்
1. மத்தேயு
2. மாற்கு
3. லூக்கா
4. யோவான்

### வரலாறு
1. திருத்தூதர் பணிகள்

### பவுலடிகளாரின் பின்னடியாரின் திருமுகம்
1. எபேசியர்
2. கொலோசையர்
3. 2 தெசலோனிக்கர்
4. எபிரேயர்

#### பொதுத் திருமுகம்
1. I பேதுரு
2. II பேதுரு
3. I யோவான்
4. II யோவான்
5. III யோவான்
6. யாக்கோபு
7. யூதா

#### ஆயர் திருமுகம்
1. I திமொத்தேயு
2. II திமொத்தேயு
3. தீத்து

### பவுலடிகளாரின் திருமுகம்
1. I தெசலோனிக்கர்
2. கலாத்தியர்
3. 1 கொரிந்தியர்
4. 2 கொரிந்தியர்
5. உரோமையர்
6. பிலிப்பியர்
7. பிலமோன்

### மறைபொருள் இலக்கியம்
1. திருவெளிப்பாடு



இலவச விநியோகத்திற்காக

**செயல்பாடு**

1. திருவிவிலியத்தில் நீங்கள் விரும்பும் ஏதேனும் பகுதிகளைத் தேர்ந்தெடுத்து அதனை ஒரு சுருள் வடிவில் அமைக்கவும்

2. 'திருவிவிலியம் வாழ்க்கைக்கு பயனுள்ள நூலாகும்' எனும் தலைப்பில் உங்கள் பாடசாலையின் மாணவர் மன்றத்தில் ஆற்றுவதற்கென ஒரு உரை தயாரிக்கவும்.



இலவச விநியோகத்திற்காக